**O.S**.248/2012

**DW**4, குப்புசாமி

நாள் : 06.03.2020

**சாட்சி இன்று ஆஜர். சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படுகிறார்.**

**3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை ..**

அசல் வழக்கு எண்.248/2012 ல் நான் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் லோகநாதனிடம் நான் என்ன தேதியில் கிரையம் வாங்கினேன் என்ற விபரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அது ஒரு பொய்யான கிரையம் என்பதால்தான் எனது எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்குரையில் சொல்லியுள்ள தாவா சொத்து 3 ஏக்கர் 20 சென்ட் ஆகும். லோகநாதனிடம் இருந்து நான் 3/4 பங்கை கிரையம் வாங்கினேன். 4 பக்க எல்லைகளைக் குறிப்பிட்டுத்தான் பொதுவில் 3/4 பங்கை வாங்கினேன். நான் வாங்கிய கிரையப் பத்திரத்தில் எல்லைகள் கண்டு எழுதவில்லை என்றால் ஞாபகம் இல்லை. நான் வாங்கிய சொத்தின் மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர் 40 சென்ட் ஆகும். 2.40 ஏக்கர் போக மீதி விஸ்தீரணத்தை 3 ம் பிரதிவாதி லோகநாதன்தான் ஓட்டி வருகிறார் என்றால் இல்லை. நான்தான் முழு விஸ்தீரணத்தையும் அனுபவித்து வருகிறேன். நான் வாங்கியது 2.40 ஏக்கர் என்ற பட்சத்தில் நான் முழு சொத்தையும் எந்த அடிப்படையில் அனுபவிக்கிறேன் என்றால் லோகநாதன் அவரது விஸ்தீரணத்தை ஓட்டாமல் விட்டதால் அதையும் சேர்த்து நான் அனுபவம் செய்து வருகிறேன். நான் வாங்கியது போக மீதம் 1/4 பங்கை லோகநாதன் அவர் அவரது சகோதரிக்கு கிரையம் கொடுத்திருந்தார். எனக்கு விவசாயம்தான் முழு நேர தொழில். பொதுவாக ஒரு சொத்தை கிரையம் வாங்கும் தேதியில் இருந்துதான் அதன்மீது முழு உரிமையும், அனுபவமும் ஏற்படும் என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் 29.12.2008 ம் தேதி நானும் 2 ம் பிரதிவாதியும் தாவா சொத்தைப் பொறுத்து பதிவு செய்து கொண்டோம் என்று சொல்லியிருக்கிறேன் எதைப் பதிவு செய்திருக்கிறோம் என்றால் கிரைய ஒப்பந்தத்தைத்தான் அவ்வாறு சொல்லி இருக்கிறேன். கிரைய ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டது. அந்த கிரைய ஒப்பந்த பத்திரம் என் வசம் உள்ளது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் கிரையம் வாங்கிய தேதி ஞாபகம் இல்லை. 2012 ம் ஆண்டு வாங்கியிருக்கிறேன். 2012 ம் ஆண்டு முதல்தான் இந்த சொத்தில் எனக்கு உரிமை ஏற்பட்டிருக்கிறது என்றும், அதற்கு முன் எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரிதான். பெரியசாமி, மோகநாதன், லோகநாதன், விஜயலட்சுமி, தங்கமுத்து ஆகியோர் என் அனுபவத்தை இடையூறு செய்யக்கூடாது என்று வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். அந்த

வழக்கில் 2ம் பிரதிவாதி மோகநாதன் மீது நான் எந்தவித குறிப்பிட்ட பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.248/2012 ல் வாதி தங்கமுத்து என்பவர் தாக்கல் செய்த வழக்கில் 3ம் பிரதிவாதி மோகநாதன் தனக்கு பங்கு இருப்பதாக எதிர் வழக்குரையில் சொல்லியதை மறுத்து நான் கூடுதல் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்திற்கு குறிப்பிட்ட பெயர் எதுவும் தெரியாது. 3ம் பிரதிவாதி மோகநாதனை இவ்வழக்கிற்கு பின்னிட்டு பார்த்தேன். நான் அவரிடம் வழக்கு பற்றி கேட்டதற்கு அவர் இதெல்லாம் சகஜம் என்று பதில் கூறினார். 2012 ல் நான் லோகநாதனிடம் கிரையம் பெறுவதற்கு முன்னர் அவர்கள் குடும்பத்தில் என்ன நிகழ்வுகள் நடந்தன தாவா சொத்தைப் பொறுத்து என்ன நடந்தது என்று எனக்கு நேரடியாகத் தெரியாது. 3ம் பிரதிவாதி பெயரில் ஒரு கொலை வழக்கு இருந்தது தெரியும் என்றால் இந்த வழக்கிற்கு பின்னர் தெரியும். அந்த வழக்கில் ஒருவேளை அவர் குற்றவாளி என்று தீர்ப்பாகிவிட்டால் அவரது பங்கு அவருக்கு கிடைக்காது என்ற எதிர்பார்ப்பில்தான் அவருக்கு பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி தொடர்ந்து ஊரில் இல்லாததால் 2008 ம் ஆண்டு போடப்பட்ட ஒப்பந்தத்திற்கு 2012 ம் ஆண்டுதான் கிரையம் முடிக்கப்பட்டது. 2012 ம் ஆண்டு கிரையம் முடிப்பதற்கு முன்னர் நான் வில்லங்கச் சான்றிதழ் எடுத்துப் பார்த்தேன். கிரையத்தன்று வில்லங்கச் சான்று பார்க்கவில்லை. என் கிரையத்திற்கு பின்னிட்டுதான் 3ம் பிரதிவாதி மோகநாதன் விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்திருந்தார். நான் அவ்வாறு சொல்வது தவறு என்றால் சரியல்ல. நான் லோகநாதனிடம் கிரையம் பெறும்போது எந்த ஆவணங்களின் அடிப்படையில் கிரையம் பெற்றேன் என்றால் பூர்வீக சொத்து பத்திரங்கள், விடுதலைப் பத்திரங்கள் ஆகியவற்றைப் பார்த்துதான் கிரையம் வாங்கினேன். நான் கிரையம் பெற்றதற்கான அசல் ஆவணங்கள் எதுவும் என் கைவசம் இல்லை என்றால் சரிதான். லோகநாதன் சொத்தின் அசல் ஆவணங்களை என்னிடம் காட்டினார். ஆனால் என்னிடம் கொடுக்கவில்லை. அவரது சகோதரிக்கும் ஒரு பாகம் இருப்பதால் சொத்தின் அசல் ஆவணங்களை அவர் என்னிடம் கொடுக்கவில்லை. எனது முதல் விசாரணையிலோ, எதிருரையிலோ அவரது சகோதரிக்கு பங்கு இருப்பதாக நான் சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. அசல் வழக்கு எண்.238/2013 ல் 3ம் பிரதிவாதிக்கு ஒரு பங்கு இருப்பதால்தான் நான் அவருக்கு எதிராக எந்தப் பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. 01.09.2009 ம் தேதியே 3ம் பிரதிவாதி பெயரில் 2ம் பிரதிவாதி ஏற்படுத்தின் கொடுத்திருந்த 28.03.2003 ம் தேதி ஏற்படுத்திக் கொடுத்திருந்த விடுதலைப் பத்திரம் இரத்து செய்யப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. நான் 2008 ம் ஆண்டே சொத்தை கிரையம் வாங்கிவிட்டேன். நான் கிரையம் வாங்கிய தேதியிலேயே விடுதலைப் பத்திரம்

இரத்து செய்யப்பட்டிருப்பதால் நான் செய்துள்ள கிரையம் செல்லாது என்றால் சரியல்ல. இப்போதும் 3 ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் 1/3 பங்கு உள்ளது என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், ஈரோடு</u>

**<u>O.S.248/2012</u>**

2020 ம் ஆண்டு மார்ச் மாதம் 06-ம் தேதி DW5 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி திருமதி.என்.உமா மகேஸ்வரி, எம்.ஏ., எம்.எல்., முதன்மை மாவட்ட நீதிபதி என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **ஈஸ்வரமூர்த்தி** | **DW**5 | ஜாதி |
| த/க. பெயர் | | | மதம் |
| கிராமம் | | | தொழில் |
| தாலுக்கா | | | வயது |
| மாவட்டம் | | | |

**முதல் விசாரணை ..**

நான் இவ்வழக்கின் 3 ம் தரப்பினர். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். 16.09.2009 ம் தேதி 2 ம் பிரதிவாதி லோகநாதன் தனது 2/4 பாகத்தை அவரது மனைவி சாந்தி - 5 ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மென்ட் ஆவணம் பி.வா.சா.ஆ.7 ல் நான் சாட்சிக் கையெழுத்து போட்டிருக்கிறேன். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.7 ல் உள்ள 2 வது சாட்சிக் கையொப்பம் என்னுடையதுதான்.

**7 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை ..**

பி.வா.சா.ஆ.7 ஐ 10.11.2011 ம் தேதி 3 ம் பிரதிவாதி லோகநாதன் இரத்து செய்துவிட்டாரா என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. தாவா பூமி விவசாய பூமி. தற்சமயம் அந்த பூமியை யார் அனுபவித்து வருகிறார்கள் என்று எனக்கு நேரடியாகத் தெரியாது. 2 ம் பிரதிவாதி லோகநாதன் 7 ம் பிரதிவாதியை ஏமாற்றும் நோக்கத்துடன் போலியாக பி.வா.சா.ஆ.7 தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. 7 ம் பிரதிவாதி 29.12.2008 ம் தேதி ஒரு குப்புசாமி என்பவருக்கு ஒரு கிரைய விற்கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி இருக்கிறாரா என்பது எனக்குத் தெரியாது. அதன் அடிப்படையில் 27.02.2012 ம் தேதி 7 ம் பிரதிவாதிக்கு 2 ம் பிரதிவாதி கிரையம் கொடுத்துவிட்டார் என்று சொன்னால் அதுபற்றி எனக்குத் தெரியாது. அந்தத் தேதியில் இருந்து குப்புசாமிதான் அந்த பூமியை அனுபவவித்து வருகிறார் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. தாவா பூமிக்கும், நான் இருக்கும் இடத்திற்கும் சுமார் 10 கி.மீ தூரம் இருக்கும். நான் சாட்சிக் கையெழுத்து பி.வா.சா.ஆ.7 நடைமுறைக்கு வரவே இல்லை என்றால் சரியல்ல. நான் வாதி, மற்றும் மற்ற பிரதிவாதிகளுடன் கூட்டு சேர்ந்து 7 ம் பிரதிவாதிக்கு எதிராக சாட்சி

சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**3 ம் பிரதிவாதியின் தரப்பில் குறுக்கு விசாரணை ..**

5 ம் பிரதிவாதி சாந்தி என்னை சாட்சி சொல்ல அழைத்தார் என்றால் ஆமாம். அவர் எனக்கு உறவினர்தான். பிரதிவாதி லோகநாதன் தனது சொத்தை தனது மனைவி சாந்திக்கு கிரையம் எழுதிக் கொடுத்தார். லோகநாதனுக்கு அந்தச் சொத்தில் 2/4 பங்கு இருந்தது. அது அவருக்கு எந்த வகையில் பாத்தியம் என்பது எனக்கு நேரடியாகத் தெரியாது. பி.வா.சா.ஆ.7 ஐ நான் படித்துப் பார்த்தேன். அதில் குறிப்பிடப்பட்டுள்ள அசல் வழக்கு எண்.300/2007 என்ற வழக்கைப் பற்றி நான் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். பி.வா.சா.ஆ.7 16.09.2009 அன்று எழுதப்பட்டது. அந்த ஆவணத்திற்கு முன்பாகவே மேகநாதன் லோகநாதனுக்கு எழுதிக் கொடுத்திருந்த செட்டில்மென்ட் பத்திரம் இரத்து செய்யப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் சொல்வதுபோல் 2 ம் பிரதிவாதி லோகநாதனுக்கு சொத்தில் 2/4 பாகம் இருப்பதாக நான் சொல்வது பொய் என்றும், அதுபோல் அவருக்கு பாகம் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.7 ன் விபரங்கள் எனக்குத் தெரியாது என்றும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**